அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 7

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 16

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. ஈழத்தில் கூத்துகள் நடைபெறும் இடங்களுள் ஒன்று
    1. புத்தளம்
    2. வன்னி
    3. கண்டி
    4. அனுராதபுரம்

2. பத்து + இரண்டு என்பதைச் சேர்த்தெழுதினால்
    1. பத்துஇரண்டு
    2. பத்திரண்டு
    3. பதின்இரண்டு
    4. பன்னிரண்டு

3. அழுகை என்பதன் எதிர்ப்பொருட் சொல்
    1. துன்பம்
    2. அன்பு
    3. சிரிப்பு
    4. வறுமை

4. காடும் காடு சார்ந்த நிலமும்
    1. மருதம்
    2. குறிஞ்சி
    3. நெய்தல்
    4. முல்லை

5. மழை தொடர்ந்து பெய்தது. தெருவெங்கும் வெள்ளம் ஓடியது. இச்சொல்லியங்களை இணைக்கும் இணைப்பிடைச் சொல்
    1. ஆனால்
    2. அதனால்
    3. ஏனென்றால்
    4. இப்பொழுது

6. நாட்டைவிட்டு வெளியேறிய ஏதிலிகள் கரடுமுரடான பாதைகளைக் கடந்து சென்றனர். இதில் கரடுமுரடான என்பது
    1. அடுக்குத்தொடர்
    2. இரட்டைக்கிளவி
    3. இணைமொழி
    4. அடுக்கிடுக்குத்தொடர்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

7. “தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்” என்ற பாரதியாரின் கனவை நனவாக்கியவர்
   1. மகாகவி து. உருத்திரமூர்த்தி
   2. பாரதிதாசன்
   3. அன்னை பூபதி
   4. தனிநாயகம் அடிகளார்

8. உயிர்களிடத்தில் அன்பு காட்டு. இச்சொல்லியம்
   1. கூற்றுச்சொல்லியம்
   2. வினாச்சொல்லியம்
   3. ஏவற்சொல்லியம்
   4. மெய்ப்பாட்டுச் சொல்லியம்

9. ஒளி என்ற ஒரு பொருள் தரும் பல சொற்கள்
   1. சுடர், வெளிச்சம்
   2. வையகம், பார்
   3. உவகை, களிப்பு
   4. இருள், நகைப்பு

10. தமிழிலக்கிய வரலாற்றில் கி.பி 3ஆம் நூற்றாண்டு வரை நீடித்திருந்த காலம்
   1. பல்லவர்காலம்
   2. சோழர்காலம்
   3. சங்கமருவியகாலம்
   4. சங்ககாலம்

11. குழலியால் பாடப்பட்டது. இச்சொல்லியத்தில் வந்துள்ள வேற்றுமை உருபு
   1. ஐ
   2. ஆல்
   3. ஆன்
   4. ஆள்

12. நரி ஊளையிடும். அதுபோல குதிரை
   1. கனைக்கும்
   2. கத்தும்
   3. உறுமும்
   4. பிளிறும்

13. வட ஈழத்தில் சுடுமண் நாணய அச்சுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்
   1. கந்தரோடை, அநுராதபுரம்
   2. பூநகரி, புத்தளம்
   3. கந்தரோடை, பூநகரி
   4. நல்லூர், அக்குறுகொட

14. மொழிக்கு முதலில் வரும் வினா எழுத்துகள்
   1. எ, யா
   2. ஆ ஒ
   3. ஒ, யா
   4. எ, ஆ

15. ஈழத்தமிழர் என்பதைப் பிரித்தெழுதினால்
   1. ஈழ + தமிழர்
   2. ஈழத் + தமிழர்
   3. ஈழத்தமிழ் + அர்
   4. ஈழம் + தமிழர்

16. காந்தள் என இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட பூ
   1. முல்லைப்பூ
   2. மல்லிகைப்பூ
   3. கார்த்திகைப்பூ
   4. தாமரைப்பூ

17. அகச்சுட்டைக் குறிக்கும் சொல்
   1. அவள்
   2. அவ்வீடு
   3. அவனா?
   4. இவ்வீடு

18. போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்கும் அடிபணியாது ஆட்சிசெய்த மன்னன்
   1. எல்லாளன்
   2. கயிலாயவன்னியன்
   3. பண்டாரவன்னியன்
   4. சங்கிலியன்

19. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு
   1. குடுகுடு
   2. பென்னம்பெரிய
   3. ஆடிப்பாடி
   4. உண்டு உடுத்து

20. அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்து தன் இன்னுயிரைத் துறந்தார். இச்சொல்லியத்தில் வந்துள்ள செயப்படுபொருள்
   1. அன்னை பூபதி
   2. துறந்தார்
   3. நோன்பிருந்து
   4. இன்னுயிரை

21. கொடியில் குலையாக இணைந்திருந்து ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பழம்
   1. மாம்பழம்
   2. முந்திரிகைப்பழம்
   3. பலாப்பழம்
   4. தோடம்பழம்

22. விளையாடினாள் என்பது
   1. உயர்திணை பெண்பால் இறந்தகால வினைமுற்று
   2. உயர்திணை பெண்பால் நிகழ்கால வினைமுற்று
   3. உயர்திணை பலர்பால் இறந்தகால வினைமுற்று
   4. உயர்திணை பலர்பால் எதிர்கால வினைமுற்று

23. ஆசுகவி பாடுவதில் புலமை பெற்ற புலவர்
   1. சோமசுந்தரப்புலவர்
   2. பாரதிதாசன்
   3. கல்லடி வேலுப்பிள்ளை
   4. தேசிக விநாயகம்பிள்ளை

24. ஈழத்தமிழர் புலம்பெயர்ந்து பல நாடுகளில்... என்பது
   1. சொல்லியம்
   2. சொற்றொடர்
   3. பழமொழி
   4. மரபுச்சொற்றொடர்

25. தொன்றுதொட்டு ஈழம் முழுவதும் வாழ்ந்தோர்
   1. ஒல்லாந்தர்
   2. போர்த்துக்கேயர்
   3. பிரித்தானியர்
   4. தமிழர்

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

25x1 = 25 **புள்ளிகள்**

## 2 தரப்பட்டுள்ள சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமையச் சொல்லியம் எழுதுக.

1. ஆடு

பெயர்: ______________________________

______________________________

வினை: ______________________________

______________________________

2. கரை

பெயர்: ______________________________

______________________________

வினை: ______________________________

______________________________

4x1 ½ = 6 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள வினையடிகளின் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று என்பவற்றை எழுதுக.

| | | பெயரெச்சம் | வினையெச்சம் | வினைமுற்று |
|---|---|---|---|---|
| 1. | படி | | | |
| 2. | ஓடு | | | |
| 3. | சிரி | | | |

9x1 = 9 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மாந்தரது அடிப்படைத் தேவைகள் எவை?

2. வன்னி வரலாற்றில் கலந்துள்ளவை எவை?

3. ஈழத்தில் தமிழரது மூதாதையினர் எனக் குறிப்பிடப்படுவோர் யாவர்?

4. சங்ககால மக்களின் வாழ்வியல் முறை எவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தது?

5. எதிர்மறைச் சொல்லியத்தை உடன்பாட்டுவினைச் சொல்லியமாக மாற்றி எழுதுக.
   நேற்று மழை பெய்யவில்லை.

6. தொடர்ச்சொல்லியத்தைத் தனிச்சொல்லியங்களாக மாற்றி எழுதுக.
   நாம் எமது பண்பாட்டு அடையாளங்களைப் பேணி, தமிழராய் வாழ்வோம்!

7. இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல்லியம் ஒன்று எழுதுக.

5 x2 = 10 புள்ளிகள்

## 5 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

மனிதரை மனிதர்
சரிநிகர் சமமாய்
மதிப்பது நம் கடமை
வள்ளுவப் பெருமான்
சொல்லிய வழியில்
வாழ்வது அறிவுடைமை

உழைப்பை மதித்து
பலனைக் கொடுத்து
உலகில் போரைத் தடுத்திடுவோம்
அண்ணன் தம்பியாய்
அனைவரும் வாழ்ந்து
அருள்விளக் கேற்றிடுவோம்.

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1. மனிதரை மனிதர் எவ்வாறு மதிக்க வேண்டும்?

_______________________________________________

2. யார் சொல்லிய வழியில் வாழ்வது அறிவுடைமை?

_______________________________________________

3. எதை மதிக்க வேண்டும்?

_______________________________________________

4. அனைவரும் எவ்வாறு வாழ வேண்டும்?

_______________________________________________

5. உலகில் எதைத் தடுக்க வேண்டும்?

_______________________________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

1. Seran reads many selected books
2. Birds flew in the sky.
3. I will go on a trip for the summer holidays.
4. Malathy is studying in 7th grade in Tamil school.
5. Maran watered the flower plant.

**பிரான்சு:**

1. Seran cherche et lit de nombreux livres.
2. Les oiseaux ont volé dans le ciel.
3. Je partirai en voyage pour les vacances d'été.
4. Malathy étudie en 7e classe à l'école tamoule.
5. Maran a arrosé la plante à fleurs.

**நோர்வே:**

1. Seran finner mange bøker for å lese.
2. Fugler fløy på himmelen.
3. Jeg skal reise på tur i sommerferien.
4. Malathy går i sjuende klasse på tamil skolen .
5. Maran vannet blomsterplanten.

**இத்தாலி:**

1. Seran ricerca molti libri e li legge.
2. Gli uccelli volavano nel cielo.
3. Nelle vacanze estive vado in vacanza
4. Malathy frequenta la settima classe nella scuola Tamil.
5. Maran ha annaffiato la pianta.

**நெதர்லாந்து:**

1. Seran zoekt en leest veel boeken.
2. De vogels vlogen in de lucht.
3. Ik ga in de zomervakantie op vakantie.
4. Malathy zit in de 7e klas, op Tamilschool.
5. Maran gaf de planten water.

**டென்மார்க்:**

1. Seran finder mange bøger han kan læse.
2. Fuglene fløj på himlen.
3. Jeg tager på  udflugt i sommerferien.
4. Malathy går i 7. klasse på tamilskolen.
5. Maran vandede blomsterplanten.

**சுவீடன்:**

1. Seran söker och läser många böcker.
2. Fåglar flög på himlen.
3. Jag kommer åka på en resa under sommarlovet.
4. Maalathy studerar 7:e klass i tamilskolan.
5. Maran vattnade plantan/blomman.

**பின்லாந்து:**

1. Seran etsii ja lukee paljon kirjoja.
2. Linnut lensivät taivaalla.
3. Minä Menen Matkalle kesäloman aikana.
4. Malathy opiskelee 7. luokalla tamilikoulussa.
5. Maran kasteli kukkakasvin vedellä.

**தமிழ்:**

1. ____________________________________________

____________________________________________

2. ____________________________________________

____________________________________________

3. ____________________________________________

____________________________________________

4. ____________________________________________

____________________________________________

5. ____________________________________________

____________________________________________

5x2 = 10 **புள்ளிகள்**

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தமிழர் பண்பாட்டு அடையாளங்கள்
2. சமூகவலைத்தளங்கள்
3. எனது குடும்பம்

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - குடும்பத்தில் உள்ளோர்
   - பெற்றோரின் பங்கு
   - குடும்ப ஒற்றுமை

4. நீங்கள் பார்த்த கலைவிழா

   **உள்ளடக்கக் குறிப்புகள்:**

   - நடைபெற்ற இடம்
   - கலைநிகழ்வுகள்
   - உங்களது கருத்து

15 புள்ளிகள்

## 1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.

பருவகாலங்கள் நான்கு வகைப்படும். அவை இலைதுளிர் காலம், கோடை காலம், இலையுதிர் காலம், பனி காலம் என்பனவாகும். இந்த நான்கு பருவகாலங்களும் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மாறிமாறி வருகின்றன. இலைதுளிர் காலத்தில் மரங்களில் இலைகள் துளிர்த்து இளம்பச்சை நிறமாகக் காட்சியளிக்கும். கோடை காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும். இக்காலத்தில் பகற்பொழுது நீண்டும் இரவுப்பொழுது குறுகியும் காணப்படும். இலையுதிர் காலத்தில் மரங்களில் இலைகள் மஞ்சள் நிறமாகக் காட்சியளிக்கும். அத்துடன் இலைகள் உதிர்ந்து நிலத்தில் விழும். பனி காலத்தில் குளிர் அதிகமாக இருக்கும். பகற்பொழுது குறுகியும் இரவுப்பொழுது நீண்டும் இருக்கும். இக்காலத்தில் மரங்களில் பனி படிந்து வெள்ளையாகக் காணப்படும். அனைத்து உயிரினங்களதும் வாழ்க்கை முறையானது பருவகாலங்களில் தங்கியுள்ளது. நானிலங்களில் வாழ்ந்த பழந்தமிழரது வாழ்க்கையுடன் பருவகாலங்கள் நெருங்கிய தொடர்புடையனவாய் விளங்கின. இதனைப் பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து நாம் அறிகின்றோம்.

1. பகற்பொழுது நீண்டும் இரவுப்பொழுது குறுகியும் காணப்படும் காலம் எது?

______________________________

______________________________

2. பனி காலத்தில் மரங்கள் ஏன் வெள்ளை நிறமாகக் காணப்படும்?

______________________________

______________________________

3. இலையுதிர் காலத்தில் இலைகள் எப்படிக் காட்சியளிக்கும்?

______________________________

4. அனைத்து உயிரினங்களதும் வாழ்க்கை முறையானது எதில் தங்கியுள்ளது?

______________________________

______________________________

5. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து எதை அறிகின்றோம்?

______________________________

______________________________

______________________________

5x2 = 10 புள்ளிகள்

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் ✗ எனவும் அடையாளம் இடுக.**

**மாதவி கலைக்கூடத்தின் பொன்விழா**

பல இளங்கலைஞர்களை உருவாக்கியுள்ள எமது கலைக்கூடம், இந்த ஆண்டு பொன்விழாவைக் கொண்டாடவுள்ளது.

நிகழ்வுகள்:

- ✶ மங்கல விளக்கேற்றல்
- ✶ அகவணக்கம்
- ✶ வரவேற்புரை
- ✶ நடனம்
- ✶ தமிழிசை
- ✶ நாடகம்
- ✶ வில்லுப்பாட்டு

⇨ அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

இடம்: முத்தமிழ்க் கலையரங்கு

காலம்: 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை 10:00 மணி

ஒழுங்கமைப்பு: மாதவி கலைக்கூடம்

1. மாதவி கலைக்கூடத்தின் பொன்விழா நடைபெறவுள்ளது. (   )
2. இவ்விழா சனிக்கிழமை நடைபெறும். (   )
3. முத்தமிழ்க் கலையரங்கில் விழா நடைபெறவுள்ளது. (   )
4. விழா கண்ணகி கலைக்கூடத்தால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. (   )
5. நிகழ்வுகளுள் தமிழிசையும் ஒன்றாகும். (   )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 06 | | | |
| 3 | 09 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |